بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# jamaat ul sahih al islam – tamil nadu



ஜுமுஆ பேருரை

தலைப்பு :

## அல்லாஹ்வின் பண்புகள்

(பாகம் -9)


*ஹஸ்ரத் கலீஃ.பத்துல்லாஹ்*
*முனீர் அஹ்மது அஸீம் (அலை)*


***19 June 2020***
**(27 SHAWWAL 1441 AH)**


*வெளியீடு*

*அமீர்,*

*ஜமா அத் தமிழ்நாடு*

***Phone No:- 917502272774***

# The Attributes of Allah (Part 9)

## அல்லாஹ்வின் பண்புகள் (பாகம் - 9)

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்ததை தொடர்ந்து தஷஹ்ஹுத், தஅவ்வூது மற்றும் அல்.்.பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜும்மா பேருரையியை நிகழ்த்தினார்கள்.

அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ்வின் பண்புகள் என்னும் விஷயத்தைக் குறித்து எனது பேருரையை மீண்டும் நாம் தொடர்கிறோம், மேலும் அல்லாஹ் தனக்குச் செய்த பேருதவிக்காக மனிதன் அல்லாஹ்வுக்கு நனறி கூறுகின்றான். அவனது மிக அழகான பெயர்களால் அவனைக் குறிப்பிட்டு நாம் அவனுக்கு நன்றி கூறுகிறோம்.

ஆதம் (அலை) அவர்களை படைத்த போதும் அதை தொடர்ந்தும் அல்லாஹ்விடமிருந்து பல்வேறு நன்மைகளை பெற்று பயன்டைந்தார். மேல்தட்டு மக்கள் உயரிய இறை நிலைகளை (நிலைகள், உணர்ச்சிகள், உறவுகள்) கொண்டிருந்தனர் என்றும் அதனை அவர்கள் வேறு யாருடனும் பகிர்ந்துகொள்ளவிலலை என்றும் நமக்கு தோன்றுகிறது. ஆனால் அவர்கள் மூலமாகவே, சாதரண மனிதர்களை தவிர்க்காமல், இறைவன் தனது திட்டத்தை நிறைவேற்றுகிறான்.

விலக்கப்பட்ட பழத்தை சாப்பிட்டதன் மூலம் தான் பூமிக்கு அனுப்பபட்டார்கள் என்பது ஒரு உண்மையாகும், அதன் மூலம் உண்மையில் பல மகிழ்ச்சியான விளைவுகள் ஏற்ப்பட்டது. ஆனால் அல்லாஹ்வுக்கு கீழ்ப்படியாமை எவ்வாறு நல்ல விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும் என்று நீங்கள் கேட்கலாம். ஆதம் (அலை) அவர்கள் மற்றும் அவரது மனைவி சொர்க்கத்தில் இறைவனின் அல் ரஸாக் (வழங்குபவன்), அல் முஉதி (நன்கொடையாளன்), மற்றும் அல் முஹ்சின் (பேருபகாரி) ஆகிய பண்களை மட்டுமே அறிந்து வாழ்ந்தனர். ஆனால் இறைத் திட்டத்திற்கு தலைமை தாங்கும் அவனது இரகசிய நற்பண்புகளில், சிலவற்றை அதாவது அல் ஹாலீம் (மகத்தானவன்), அல் சத்தார் (மறைப்பவன்), அல் ஹாபூர் (தயவானவன்) மற்றும் பல பண்புகயில் ஒன்றான தேர்ந்தெடுப்பவன் போன்ற

பண்புகளை வெளிப்படுத்த அவன் தீர்மானித்தான். உண்மையில் இறைவனின் மகத்துவம் என்னவென்றால் ஆத்ம (அலை) மற்றும் அவரது மனைவியின் செயலுக்காக அவர்களை தண்டிக்க அவன் அவசரப்படவில்லை ஏனெனில் காலத்தை நீட்டித்து வழங்குவது என்பது அவனது சிறப்பு பண்புகளில் ஒன்றாகும். மனந்திரும்புவதற்காக அவன் பாவிகளுக்கு கால அவகாசத்தை அதிகபடுத்ததி கொடுக்கின்றான். அதன் காரணத்தால் ஒருவர் மனந்திரும்புவாரென்றால், பின்னர் அவரை மன்னித்து, அவரருடன் கருணை கட்டலாமா? அல்லது தனது அதிகாரத்தை பயன்படுத்ததி தண்டனை வழங்கலாமா? என்பதை தீர்மானிக்கிறான். ஆனால் இறைவன், தவறுகளை மறைப்பவனாக (அல்-சத்தார்) தன்னை வெளிப்படுத்த விரும்பினான். ஏனென்றால், பழத்தை சாப்பிட்டபிறகு, அவர்களின் நிர்வாணம் அவர்களுக்கு வெளிப்பட்டது. அவர்கள் சொக்கத்தின் ஆடைகளை இழந்துவிட்டனர். குர் ஆனில் கூறப்பட்டுள்ளபடி **“அவ்விருவரும் சுவர்க்கத்தின் அலங்கராப் பொருட்களை (இலைகளை கொண்டு தம்மீது பொருத்திக் கொள்ளத் தொடங்கினர்”** (20:122)

இறைவனால் மறைக்கப்பட்ட முக்காடு உண்மையில் அதுவே ஆகும். எனவே அல் ஹில்ம், அல் சதர், அல் மக்.ீபிரா, மற்றும் அல் இஜ்திபா போன்ற (கடுமையாக) செயல்படுத்தகூடிய பண்பு பெயர்கள் இறை பண்பு பெயர்களுடன் ஒத்திருக்கின்றது. அவன் அல் ஹில்ம் ஆகவும், அல் சத்தார் ஆகவும், அல் ஹாபிர் ஆகவும் இருக்கின்றான். அபு ஹுறைரா (ரலி) அவர்கள் தெரிவித்திருப்பதாக காணலாம். **மிக அழகான 99 இறை பண்பு பெயர்கள் (இஸ்லாமிய) பாரம்பரிய நூல்களில் ஒன்றில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.**

இதற்கிடையில் அல் சத்தார் - இந்த இறை பண்பு பெயர் திரு நபி (ஸல்) அவர்களுக்கும் முந்தயகால நூல்களில் காணயியலாது. மேலும் ஆரம்பகால இஸ்லாமிய நூல்களில் கூட மிகவும் அரிதாகவே இதை காண முடியும். இந்த பண்புபெயரின் பயன்பாடு பல நபி மொழிகளிலிருந்து பின்பற்றப்படுவதாக தெரிகிறது. இதன் மூலம் அவனது சிறப்பு மிக்க பண்புகளை அதிகமாக உணருவதுடன் நாம் ஆதம் (அலை) அவர்களின் சம்பவத்தை நன்கு புரிந்துக் கொள்ள முடியும்.

இந்த நிகழ்வுக்கு பிறகு, அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களை தேர்ந்தெடுத்தான் என்பதை அவருக்கு தெரியப்படுத்த அல்லாஹ் விரும்பினான். இந்தத் தேர்ந்தெடுத்தல் மூலம் இரண்டு ஆன்மீக நிலைகளை பின்பற்ற வேண்டும். (இறைவனின் பக்கம் திரும்புவது மற்றும் இறை வழிகாட்டுதலை பின்பற்றுவது) ஆகவே, தனது தேர்ந்தெடுத்தலைப் பற்றியும், படைப்புக்கு முன்பே அவற்றிற்கு மேல் இருந்த அன்பையும், அக்கறையையும் பற்றி அவருக்கு தெரியப்படுத்த, அவர் மரத்திலிருந்து பழத்தை சாப்பிடுவதற்கு முன்னரே இறைவன் தீர்மானித்தான். ஆனால் ஆதமின் இந்தச் செயலானது இறைவனிடமிருந்து அவரை பிரித்துவிடுவதற்கோ அல்லது அவர்களிடமிருந்து இறை உதவியை எடுத்து கொள்வதற்கோ இது ஒரு காரணமாக அமையவில்லை. மாறாக இது ஆதம் (அலை) மீதான தனது பாசத்தை காட்ட இறைவனுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. ஒரு பழமொழியில் குறிபிடப்பட்டுள்ளபடி ‘‘முந்தைய கால மீறல்கள் அவருக்கு தீங்கு விளைவிக்கவில்லை’’

இறைவசனத்தின் தொடர்ச்சி, ஆதம் (அலை) யின் வீழ்ச்சியின் கணக்கை முடித்த பின்னர் இறைவன் அவரைத் தேர்ந்தெடுத்தான் என்பது இறைத்தேர்தலின் ஒரு துல்லியமான தருணத்தைக் குறிப்பதாக எடுத்து கொள்ள கூடாது. இந்த தேர்வானது ஆதம் (அலை) அவர்களின் பிறப்புக்கு முன்பே தீர்மானிக்கப்பட்டது ஆனால் அந்த மீறலுக்குப் பிறகுதான் இந்தந் தேர்தலின் விளைவுகள் வெளிப்பட்டன. இதனால்தான் இறைவன் இவ்விஷயத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறான். பின்னர் அவரது இறைவன் அவரைத் தேர்ந்தெடுத்து, அவரது மனந்திரும்புதலை ஏற்றுக் கொண்டு அவருக்கு வழிகாட்டினான். இறைத்தேர்தலின் விளைவுகள் அவரை மகிழ வைத்தன. அதே போல் தனிமை மற்றும் இறை வழிகாட்டுதலின் விளைவுகளும் அவரை பிரிப்படுத்தின. அதாவது (அவர் மனந்திரும்புவதற்கு இறைவன் அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டதிலிருந்து, இறைமன்னிப்பை தேடுவதற்கு அல்லாஹ் அவருக்கு அனுமதி அளித்ததிலிருந்து,). எனவே இந்த வசனம் மூன்று அறிகுறிகளைக் கொண்டுள்ளது, (அதாவது தேர்தலின் விளைவாக மனந்திரும்புதல் மறறும் மனம் திரும்புதலின் விளைவாக இறை வழிகாட்டுதலை பெறுதல்). ஆதம் (அலை) அவர்களை பூமிக்குக் கொண்டுவந்து, சொர்கத்தில் வைத்து அற்புதமான சக்தியால் தன்னை வெளிப்படுதியது போலவே இறைவன் தனது ஞானத்தால் தன்னை வெளிப்படுத்திக்

காட்டினான். அதாவது இந்த தாழ்ந்த உலகமானது காரணங்களுடையவும் இடைத்தரகாரர்களுடையவும் உலகம் என்பதை அவன் அவரை உணரவைத்தான்.

படைப்பினங்களை படைப்பதன் மூலம்தான் இறைவன் தன்னை முதலில் வெளிப்படுத்தினான் என்பதை நீங்கள் முதலில் அறிந்து கொள்ளுங்கள். இதன் காரணத்தால் தான் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் இறைவனை அவனது பண்புப் பெயர்களைக் கொண்டு அவனை அழைத்து பிரார்த்தனை செய்தார். ‘‘யா காதீர்’’ (வலிமைமிக்கவன்). பின்னர் அவன் தனது குறிப்பிட்ட விருப்பத்தினை வெளிப்படுத்தினான். அப்போது அவர் ‘‘யா முரீத்’’ (தன்னார்வலர்) என்று அழைத்து பிரார்த்தனை செய்தார். மரத்திலிருந்து சாபிடுவதை தடைசெய்யும் முடிவை இறைவன் அவரிடம் வெளிப்படுத்தினான். அப்போது ஆதம் (அலை) அவர்கள் ‘‘யா ஹக்கீம்’’ (ஞானமுள்ள முழுமையான எஜமானன்) என்ற அவனது பண்பு பெயரால் அவனை அழைத்து பிரார்த்தனை செய்தார். பின்னர் அவர் அப்பழத்தை சாப்பிட முன்னரே தீர்மானித்திருந்தான். அப்போது, ‘‘யா வஹ்ஹார்’’ (உச்ச ஆதிக்கம் செலுத்துபவன்) என்ற அவனது பண்பு பெயரால் அவனை அழைத்து பிரார்த்தனை செய்தார். இறைவன் அவரை தண்டிக்க அவசரப்படவில்லை. அப்போது ஆதம் (அலை) அவர்கள் அவனுடைய அப்பண்பு பெயரால் ‘‘யா ஹலீம்’’ (மகத்தான மனம் கொண்டன்) என்று அழைத்து பிரார்தனை செய்தார். இறைவன் ஆதம் (அலை) அவர்களின் தவறுகளை வெளிப்படுத்தவில்லை அப்போது அவர் ‘‘யா சத்தார்’’ (தவறுகளை மறைத்து வைப்பவன்) என்று அழைத்து பிரார்த்தனை செய்தார். இறைவன் ஆதமின் மனந்திரும்புதலை ஏற்றுக்கொண்டதால், ஆதம் (அலை) அவர்கள் ‘‘யா தவ்வாப்’’ (கருணை நிறைந்தவன் மற்றும் மனந்திரும்புதலை ஏற்றுக்கொள்பவன்) என்று அழைத்து பிரார்த்தனை செய்தார்.

பின்னர் இறைவன் அவரை பூமிக்கு கொண்டு வந்து, அவரது வாழ்வாதாரத்தை எளிதாக்கினான் அப்போது அவனை ‘‘யா லத்தீப்’’ (கருணைமிக்கவன்) என்று அவனது பண்பு பெயரால் அழைத்து அவனிடம் பிரார்த்தனை செய்தார். பின்னர் எதை வேண்டுமானாலும் சகித்துக் கொள்ளும் மனப்பாண்மையை இறைவன் அவருக்கு வழங்கினான். அப்போது ஆதம் (அலை) அவர்கள் ‘‘யா முயீன்’’ (உதவி செய்பவன்) என்ற அவனது பண்புபெயரால்

அவனை அழைத்து பிரார்த்தனை செய்தார். பின்னர் சொர்க்த்தில் தடைசெய்யப்பட்ட இரகசியம், அவரது மீறல் மற்றும் வீழ்ச்சியின் இரகசியத்தை அவருக்கு வெளிப்படுத்தியபோது, அவர் இந்த இறை ஞானத்தை ஏற்றுக் கொண்டு அவர் ''யா ஹக்கீம்'' (ஞானமிக்கலன்) என்ற அவரது பண்பு பெயரால் அவனை அழைத்து பிரார்த்தனை செய்தார். பின்னா ஆதம் (அலை) அவர்களுக்கு எதிராளிகளை வெல்லும் ஆற்றலை இறைவன் வழங்கினான். அப்போது ''யா நசீர்'' (வெற்றியை வழங்குபவன்) என்று அவனது பண்புபெயரால் அவனை அழைத்து பிரார்த்தனை செய்தார். கடைசியாக இறைவன் அடிமைதனத்தின் கோரிக்கைகளைச் சுமக்க அவருக்கு உதவி புரிந்தான். அப்போது ''யா தாஹிர்'' (ஆதரவாளன்) என்ற அவனது பண்பு பெயரால் அவனை அழைத்து பிரார்த்தனை செய்தார்.

ஆகவே இந்நிகழ்வுகள் அனைத்து  ஆதாமுக்கு எதிரான இறை முடிவை நிறைவேற்றுவதும், அவர் மீது சட்டரீதியான பரிந்துரைகளை விதிப்பதும் மட்டுமாகவே இருந்தது. அதாவது இறைவன் ஆதம் (அலை) அவர்களை பூமிக்கு கொண்டு வந்து, அது மூலம் அவர் மீதும், அவர் வழியாக பூமியிலும் அமைதியை நிலைநாட்டுவதுமாகவே இருந்தது. இதை விட வேறு எந்த அற்புதமான பரிசுகளை இறைவன் ஆதம் (அலை) அவர்களுக்கு வழங்க முடியும்? இறைவன் ஆதம் (அலை) அவர்களிடம் காட்டிய கருணை எவ்வளவு உன்னதமானது! ஒவ்வொரு முறையும் மனிதகுலம் ஆபத்தில் வீழ்ந்து விடும போது, மனிதன் சரியான பாதையில் இருந்து விலகி அல்லாஹ்வை மறந்து விடும் போது அல்லாஹ் தனது ஆதமை மீண்டும் பரிசுத்த ஆவியுடன் அனுப்புகிறான் மேலும் இந்த ஆதம் ஒரு மனிதராக இருப்பதால், மனித படைப்பு என்ற முறையில் பல பலவீனங்கள் இருந்தாலும் அல்லாஹ்வின் கருணையும் அவனது சர்வ வல்லமையும் அவனது இறை வெளிப்பாடுகளும் அவர் மீது இறக்கி அவருக்கு இறைவன் உதவுகின்றான். மேலும் அல்லாஹ் தனது கலீ∴பத்துல்லாஹ் மீது வைத்திருக்கும் அன்போடு உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பு உறவு மூலம் அல்லாஹ்வே அவருக்கு ஆதரவாக மாறுகிறான். பூமியில் அவரது பணியை சிறப்பாக நிறைவேற்ற இறைவன் அவருக்கு உதவுகிறான்.  அல்ஹம்துலில்லாஹ்!

மேலும் அல்லாஹ் அவரை கைவிடாமல் அவருக்கு வழிகாட்டுகிறான். இப்லீஸ் மற்றும் அவனது இராணுவத்தின் திட்டங்களை எவ்வாறு திசை திருப்பி

மனிதகுலத்தை வழி நடத்துவது என்பதை அவருக்கு காட்டுகிறான் குறிப்பாக அல்லாஹ்வின் அடையாளங்களையும் அவனது தூதரின் வருகையையும் பரிசீலனை செய்து, அந்த உண்மை பெற முன்வருபவர்களுக்கு அவன் நேர் வழியை திறந்து கொடுக்கினறான். இது மனிதகுலத்தின் மீதான அல்லாஹ்வின் அன்பை நிருபிக்கிறது.

அவன் ஒரு தூதரை அனுப்பும் வரை அவன் யாரையும் தண்டிக்க மாட்டான். ஒரு தந்தை தனது குழந்தைகளை நேசிப்பதை விட மேலாக அல்லாஹ் தனது தூதரை நேசிக்கிறான், அவரிடம் நெருக்கமாக இருக்கிறான். அவன் தனது கலீ∴பா மூலம் மனித குலத்தை வழிநடத்துகிறான் மேலும் நமது பிரபஞ்சம் அறிந்த மிகப்பெரிய கலீ∴பத்துல்லஹ் உண்மையில் நமது தலைவா் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஆவார்கள். உண்மையில் அல்லாஹ்வின் தூதர்கள் அனைவரும் ஆதமின் ஆன்மீக வம்சாவளியைச் சேர்ந்தவர்கள். ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் ஆசீர்வதித்து, வெளிப்பாடுகள் வழங்கினான். இதனால் மனிதகுலத்திற்கு அனைத்து நன்மையிலும் மகிமையிலும் தன்னை அவன் வெளிப்படுத்திக் கொண்டான். இதனால் நாம் அவனை மட்டும் வணங்குகிறோம் மேலும் நாம் நம்முடைய அன்பை அவனுக்கு பொழிகிறோம், அவனுக்கு மட்டும் அடிபணிகிறோம். நாம் இவ்வாறு செய்யும் போது இறை இரக்கமும் அன்பும் நமக்காக அவன் ஒதுக்கிவைக்கின்றான். இன்ஷா அல்லாஹ்

எனது இந்த பிரசங்கத்தின் முதல் பகுதியை இன்று முடித்துக் கொள்கிறேன். அடுத்த வெள்ளிக்கிழமை அதே விஷயத்தில் எனது பேருரையை தொடர அல்லாஹ் எனக்கு தவ்பீக் வழங்கட்டும். இன்ஷா அல்லாஹ்.

அல்லாஹ் அனைத்து நம்பிக்கையாளர்களையும் ஆசிர்வதித்து, அவனுடன் நெருக்கத்தை ஏற்படுத்த உதவி புரிவானாக குறிப்பாக இந்த நூற்றாண்டில் தனது கலீ∴பத்துல்லாஹ்வின் வருகையுடன்! அல்லாஹ் மனிதர்களின் இதயங்களைத் திறந்து, இந்த ஒளியை உணரவும், அவனுடைய தனித்துவத்தை அறியவும் மேலும் இந்த தூதரை ஏற்றுக் கொள்ளவும் உதவி புரிவானாக! அவ்வாறேயானால் அவர்களும் இந்த நூற்றாண்டில் அவனது அன்பிலிருந்து பயனடையலாம். இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

## Divine Revelations

### இறை வெளிப்பாடுகள்

இரண்டாவது பகுதி: ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி முடிவெடுப்பதற்கு முன்பு அல்லாஹ்வை அழைத்து நான மிக அதிகமாக துஆசெய்தேன். அல்ஹமதுலில்லாஹ் தஹ்ஜுத் தொழுகைக்குப் பிறகு அதாவது 03:15 மணியளவில் (மிகவும் குளிரான இரவாகயிருந்தது) அல்லாஹ் இந்த வெளிப்பாடுகளை எனக்கு வழங்கினான். இந்த இறை செய்திகள் மூன்று முறை இறங்கியது மேலும் சலாத் உல்∴பஜ்ர் வரையில் அது தொடர்ந்தது.

**“அல்ஹம்துலில்லாஹில்லதீ அன்ஸல அல அப்திஹி றூஹில் குத்சி வலம் யஜ்அல்லஹுஇவஜா”**

**“தனது அடியார் மீது பரிசுத்த ஆவியை இறக்கிய அல்லாஹ்வுக்கே அனைத்து புகழும் மேலும் இதில் எந்த தெளிவற்றலையும் இல்லை”.** (அதாவது இறக்கப்பட்ட வெளிப்பாடுகள் அனைத்தும் உண்மைதான்: அவற்றில் எந்த சந்தேகமும் இல்லை).

**அன்னஹு லன்யுஆமின மின் ஹௌமிக்க இல்லா மன் கத் ஆமன பலா தப்தஇஸ் பிமாகாநூயப்அலூன்”**

**“உங்கள் மக்களில் (இங்கே குறிப்பிடபடுவது மெரீஷியஸ் மக்களாகும்) ஏற்கனவே நம்பிக்கை கொண்டவர்களைவிட அதிகமான மக்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள். அவர்களின் செயலை எண்ணி நீர் வருத்தப்பட வேண்டாம்”**

**“அப அன்த துக்ரிஹுன்னாஸ ஹதா யக்குன்னூ மும்மினீன்”**

**“மக்களை நம்பிக்கையாளராக மற்றும்படி கட்டாயப்படுத்துவது உங்களுடையதா?”**

**“பஜ்தனிபூ லா அல்லக்கும் துப்லிஹுன்”**

**“புறப்படுங்கள், இதனால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள்”**

“வ உலாஇக்க ஹுமுல் முதாதூன்”

“இவர்கள்தான் வரம்பு மீறு பவர்கள்”

“வ அன அக்தர்துக்க பஸ்தமீம் லீமா யூஹா”

“நான் உன்னை தேர்தெடுத்திருக்கின்றேன். எனவே நான் வெளிப்படுத்தப் போவதைக் கேளுங்கள்”

“குல், குல்லுன் முதரப்பிசூன் பதரப்பசு: பஸதா லாமூன மன் அஸ்ஹாபு சிறாத்தி சவ்யீ வமனிஹ்ததா”

கூறுங்கள், எல்லோரும் காத்திருக்கிறார்கள். எனவே காத்திருங்கள் சரியான பாதையில் உள்ளவர்கள் மற்றும் நேர்வழியை பெற்றவர்கள் யார் என்பதை நீங்கள் விவைில் அறிவீர்கள்.

**Translated by:**

**Azim Ahmad**

**EDITING & PUBLISHING ARE DONE BY**

*AMIR*

***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***

**TAMIL NADU**

**Ph. No. 917502272774**